2019 ஜூலை 19]

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பாதுகாப்பும் குறைவாக இருக்கிறது. மின் திருட்டு மட்டுமல்ல, மின்* loss *மட்டுமல்ல, மக்களுக்குப் பாதுகாப்பும் குறைவாக இருக்கிறது. குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டப்படுகின்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளில், குடிசை மாற்று வாரியம்* underground cable *அமைப்பதற்குண்டான தொகையைக் கட்டினால், அதுகுறித்து மின்சார வாரியம் பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு மாநகராட்சியாக* underground cable *அமைக்கின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் ஆய்வு செய்து, மக்கள் பாதிக்கப்படுகின்ற வகையிலும், மக்களுக்கு பாதுகாப்பற்ற வகையிலும் இருந்தால், அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

பாதாள சாக்கடைத் திட்டம்

***225—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை நகராட்சி, மதுக்கூர் மற்றும் அதிராம்பட்டினம் பேரூராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடுக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மதுக்கூர் மற்றும் அதிராம்பட்டினம் பேரூராட்சிகளில் கசடுக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் குடிமராமத்து நாயகன், வணக்கத்திற்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். அவருக்கு உற்ற துணையாக இருந்து, இந்த நல்லாட்சிக்குத் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை நகராட்சி ஒரு வளர்ந்த நகராட்சியாகும். இதன் மக்கள்தொகை கிட்டத்தட்ட 90,000-க்கும்மேல் இருக்கிறது. இந்த நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும். அதேபோல, அதிராம்பட்டினம் பேரூராட்சி ஒரு நகராட்சிக்கு இணையான பேரூராட்சியாகும். சிறுபான்மையின மக்கள் அதிகம் வசிக்கும் அந்தப் பகுதிக்கும், அதேபோல மதுக்கூர் பகுதிக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 19]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உத்தரவிட்டு, கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நாங்கள் எல்லோரும் சென்றபோது, சிறப்பான முறையில் அனைத்து மாண்புமிகு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கு பணியாற்றினார்கள். அதிலும் குறிப்பாக, பட்டுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சிறப்பான முறையில் தொகுதி மக்களுடன் இணைந்து பணியாற்றினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்தபடி, 51 நகராட்சிகள் மற்றும் 59 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் ரூ.200 கோடி மதிப்பீட்டில், 49 நகரங்களில் கசடுக் கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 31-8-2018 அன்று நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பட்டுக்கோட்டை நகராட்சியின் மக்கள்தொகை மற்றும் வெளியேறும் கழிவுகளின் அடிப்படையில், பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, கசடுக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.3 கோடியே 60 இலட்சம் மதிப்பில் செயல்படுத்த நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, 29-1-2019 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. மேலும், மதுக்கூர் மற்றும் அதிராம்பட்டினம் பேரூராட்சிகளில் உள்ள மக்கள்தொகை மற்றும் வெளியேறும் கழிவுநீரின் அடிப்படையில் கசடுக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லை என்றபோதிலும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அவர் துறை சார்ந்த விவரங்களை தன் விரல் நுனியில் வைத்திருப்பவர் என்பதால், மாண்புமிகு அண்ணன் அவர்களிடம் பணிவோடு நான் இந்தக்*

கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சி என்பது வளர்ந்த நகராட்சிக்கு இணையான ஒரு பேரூராட்சியாகும். அதை மாண்புமிகு அண்ணன் அவர்கள் நகராட்சியாகத் தரம் உயர்த்தி, அந்த நகராட்சியிலே அமைந்திருக்கும் கஜா புயலால் பாதிக்கப்பட்ட பேருந்து நிலையத்திற்கு மேற்கூரையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் இருந்தால்கூட, தொகுதி மக்கள்மீது உள்ள அக்கறையால் அவர் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கின்றார். அதிராம்பட்டினம் அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவது சம்பந்தமாக பல கேள்விகளுக்கு இதற்கு முன்னரே பதில் சொல்லியிருக்கிறேன். அந்தப் பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, அங்கிருந்து அரசுக்கு வரவேண்டும். அப்படி வருகின்றபட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கு பேருந்து நிலையத்தின் மேற்கூரையை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதுகுறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் நகராட்சிக்குட்பட்ட சுமார் 100 ஏக்கர் பரப்பளவிலே அமைந்துள்ள பெரிய ஏரி தூர் வாரப்பட்டு வருகிறது. அதற்கு ஒருபுறமாக, 25 ஆண்டுகாலமாக

2019 ஜூலை 19]

ஒரு இலட்சத்து 25 ஆயிரம் டன் குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால், நோய் பரவும் அபாயம் உள்ளது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்களால் ரூ.44 கோடியிலே, 50 ஏக்கரில் வண்டலூர் பக்கத்தில் உள்ள வேங்கடமங்கலத்திலே இடம்கொடுக்கப்பட்டு, அந்த இடத்திலே இங்கிருந்து எடுக்கப்படுகின்ற குப்பைகள் எல்லாம் கொட்டப்பட்டு, ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அந்தப் பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது, இந்தக் குப்பைகள் எல்லாம் அங்கு எடுத்துச் செல்லப்பட்டால்தான், இந்தப் பகுதியில் நீர் ஆதாரம் வரும். ஆகவே, இந்த 1 இலட்சத்து 25 ஆயிரம் டன் குப்பைகளை உடனடியாக அகற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்விதான். இருந்தாலும்கூட, தொகுதி மக்கள்மீது உள்ள அக்கறையில் கேட்டிருக்கின்றார். பல்லாவரம் நகராட்சி, வார்டு 23-ல் அமைந்துள்ள பெரிய ஏரியில் சுமார் 5 ஏக்கர் பரப்பில் 30 ஆண்டுகளுக்கு மேலாக குப்பைகள் கொட்டப்பட்டு வந்தன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 2015 ஆம் ஆண்டு வேங்கடமங்கலம் கிராமத்தில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் குப்பைகளைத் தரம் பிரித்து உரமாக்கும் புதிய திட்டம் உருவாக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டு ஜூலை முதல் குப்பைகள் அனைத்தும் வேங்கடமங்கலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதுபோல, 30-7-2008 அன்று உங்களுடைய ஆட்சியில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோதே ரூ.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அதை கைவிட்டுவிட்டார்கள். திடக் கழிவு மேலாண்மை என்பது பெரிய சவாலான ஒன்றுதான். அதைச் சரியாக நடைமுறைப்படுத்த இயலாததால் ஏதோ ஒரு வகையில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

பல்லாவரம் பெரிய ஏரி பகுதியில் குப்பை கொட்டப்படும் இடத்தில் தோராயமாக 350 வீடுகளும், 40 வணிக வளாகங்களும் உள்ளன. மேலும், இந்த நகராட்சியில் நாள் ஒன்றுக்கு 110 மெட்ரிக் டன் குப்பை சேகரம் ஆகிறது. பல்லாவரம், தாம்பரம், பம்மல் மற்றும் அனகாபுத்தூர் ஆகிய நகராட்சிகளில் குப்பைகளைத் தரம் பிரிக்கும் பணி மற்றும் உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நகராட்சிக்குட்பட்ட ஆறு இடங்களில் ரூ.2 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் பசுமை உரக் குடில்கள் அமைக்கப்பட்டு, குப்பைகள் தரம் பிரிக்கப்பட்டு, உரமாக மாற்றப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பல்லாவரம் நகராட்சி, பெரிய ஏரியில் 5 ஏக்கர் பரப்பளவில் 30 ஆண்டுகளுக்கு முன் கொட்டப்பட்ட குப்பைகளைத் தரம் பிரித்து, உயிரியல் அகழாய்வு--bio-mining முறையில் அகற்றுவதற்கு, ரூ.7 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, 14-3-2018 அன்று அரசின் நிருவாக அனுமதி பெறப்பட்டு, 27-4-2018 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, தற்போது பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் ஓராண்டு காலத்திற்குள் முடிவடையும். இப்பணிகள் முடிவுறும்போது, ஏரியின் 5 ஏக்கர் நிலம் மீட்கப்படுவதுடன், ஏரியின் நீர்பிடிப்புப் பகுதி அதிகமாகி, நிலத்தடி நீர் உயர வாய்ப்பு உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் நகராட்சி 24 வார்டுகளைக் கொண்டது. சுமார் 40 ஆயிரம் மக்கள் அங்கு வசித்து வருகின்றனர். இந்த நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த வேண்டுமென்று எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய தளபதி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, 2010 ஆம் ஆண்டிலே மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ரூ.52 கோடியே 62 இலட்சம் செலவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்டம் தயாரிக்கப்பட்டு, தமிழக அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. தற்போது பாதாள சாக்கடைத் திட்டத்திற்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வளர்பிறை கிராமத்தில் இடம் தேர்வுசெய்து,

ஆர்ஜிதம் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களுக்கு கடிதத்தின் நகல் 90, 9/2004-ல் அதாவது 19-4-2010-ல் பிரேரணை அனுப்பப்பட்டு, அதன்மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் கடித எண் 1548/2010, நாள் 25-1-2010-ல் அரசு முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மிகவும் விவரமாகப் போகாதீர்கள், கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சு. புகழேந்தி: ஆகவே, இது அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. இதை விரைந்து செயல்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அதே மதுராந்தகம் தொகுதிக்குட்பட்ட அச்சிறுப்பாக்கம் மற்றும் கருங்குழி பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மதுராந்தகம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்தில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அவர்களது ஆட்சிக் காலத்தில் 55 திட்டங்களை எடுத்துக் கொண்டார்கள், அதில் 19 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, 1 திட்டத்தைத்தான் முடிக்க முடிந்தது. மற்ற திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில்தான் முடிக்கப்பட்டன. மற்றவையெல்லாம் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டன. பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதைப் பொறுத்தளவில், பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. சுத்திகரிப்பு நிலையத்திற்கு இடம் கிடைக்காது அல்லது வழக்கு தொடுத்துவிடுவார்கள். இவ்வாறு பல்வேறு பிரச்சினைகள் இதில் ஏற்படுகின்றன. நாங்கள் எடுத்துச்

செய்யும் பணிகளில்கூட, 2, 3 வருடங்களில் முடிக்க வேண்டிய பணிகள், 5 ஆண்டுகள் வரை நீடிப்பதற்கு இதுதான் காரணம். மதுராந்தகம் நகராட்சியில் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இடம் பார்த்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது தொடர்பாக துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதை ஆராய்ந்து பணிகள் விரைவுபடுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அச்சிறுப்பாக்கம், கருங்குழி பேரூராட்சிகள் குறித்தும் கோரிக்கை வைத்தார்கள். பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், சுத்திகரிப்பு நிலையத்திற்கு இடம் கிடைக்காததால், கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் (septage management) திட்டத்தினைச் செயல்படுத்துகிறோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் இத்திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே, priority அடிப்படையில், அந்தப் பேரூராட்சிகளைச் சேர்ப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

143—

மகளிர் கலைக் கல்லூரி

***2869—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு கிழக்கு தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

TRUTH ALONE TRIUMPHS